
குறிஞ்சி தென்னவன்

# கவிதைகள்



89660

குறிஞ்சி தென்னவன்

JPL
C2588

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிஞ்சி தென்னவன்

# கவிதைகள்

பொது சன நூலகம்
மாநகராட்சி மன்று
28-11-1992
89660
யாழ்ப்பாணம்

KOHA JPL

குறிஞ்சி தென்னவன்

PUBLIC LIBRARY,
JAFFNA.

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

மலையக வெளியீட்டகம்
கண்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

894.8111

குறிஞ்சி - தென்னவன்

கவிதைகள்

மலையக வெளியீட்டகம்

வெளியீடு 3

முதற்பதிப்பு ஜனவரி 1987

இரண்டாம் பதிப்பு மார்ச் 1987

உரிமை ஆசிரியருக்கு

மலையக வெளீட்டகத்தின் வெளியீடுகள்

சாரல் நாடன் எழுதிய

"சி. வி. சில சிந்தனைகள்" 17-50

சு. முரளிதரனின்

"தியாகயந்திரங்கள்" 11-00

| | | |
|---|---|---|
| *Subject* | ; | Collection of Tamil Poems |
| *Author* | : | Kurunji Thennavan |
| *Cover Design* | : | S. Dorasamy |
| *Publishers* | : | Hill Country Publishing House<br>57, Mahinda Place, Colombo — 6 |
| *Printers* | : | The Union Printing Works, Kandy. |
| *Price* | : | Rs. [illegible]/- Rs. 20/- |
| *First Edition* | : | January 1987 |
| *Second Edition* | : | March 1987 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

KOHA JPL
89660

மலையகத்தில் ஓர் அர்த்த புஷ்டியான இலக்கிய விழிப் புணர்வு ஏற்பட்டுள்ளது என்பதை மலையகத்தின் பல பகுதி களுக்கு செல்லும் என்ஞல் அவதானிக்க முடிகிறது. மலையக இலக்கியத்தைப் பற்றிய தேடுதல் முயற்சி ஏற்பட்டுள்ளதை அறியும் பொழுது இதன் தேவையை நிறைவு செய்ய வேண்டும் என்கிற அவா ஏற்படுகிறது. இதன் வெளிப்பாடே மலையக வெளியீட்டகம்.

மலையக வெளியீட்டகத்தின் மூன்ருவது வெளியீடாக ''குறிஞ்சி தென்னவன் கவிதைகள்'' வெளியீட்ட ஒரே மாதத்தில், இரண்டாம் பதிப்பு வெளியிட வேண்டிய மகிழ் வான சூழ்நிலை இது தொடரும் என்ற நம்பிக்கை.

கவிஞர் குறிஞ்சி தென்னவனின் கவிதைகளிலே கற்பனை நயமும், உவமையும் கருத்துக்களை சொல்லுகின்ற வேகமும், அவருக்கே உரித்தான கைவரப் பெற்ற இலக்கிய பாணியாக அமைந்துள்ளது

கவிஞர் ஒரு தொழிலாளியாக இருப்பதனுல், தொழி லாளர்களின் உணர்வுகளை ஆசாபாசங்களை, அவர்களின் இதயத்து குமுறல்களை தனது ஒவ்வொரு படைப்பிலும் எதி ரொலிக்கிருர். அதனுல் மலையக மக்களின் கவிஞராக திகழு கிருர்.

மலையக வெளியீட்டகத்தின் வெளியிடுகளுக்கு, உங்கள் நேசக்கரத்தை நீட்டி உதவி செய்வீர்கள் என்ற நம்பிக்கை யுடன் செயல்படுகின்ருேம்.

அந்தனி ஜீவா
நிர்வாகி
(மலையக வெளியீட்டகம்)

57, Mahinda Place,
Colombo — 6.

PUBLIC LIBRARY
JAFFNA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு கனவு நனவாகிறது

''நமக்குத் தொழில் கவிதை'' என்றான் பாரதி கவிதை புனைதலை பலர் தொழிலாக்கிக்கொண்டிருக்கலாம். ஆனால் எனக்குக் கவிதை தொழிலல்ல எனது இரத்த நாளங்களில் ஓடும் உயிர்த்துடிப்பு தீமையைக் கண்டு கொதித்தெழும்பும் உணர்வின் வடிகால்.

பொழுது போக்காக, மனக்கிளர்ச்சிகளின் உந்துதலால் எழுதப்பட்டவையல்ல! மலைகள் அவைகளில் ஓய்வுகொள்ளும் முகில்கள், அதன் மேனியெங்கும் பட்டொளி வீசி பரிமளிக்கும், தேயிலைப் பசுமைகள்! அம்மண்ணின் அடியில் புதைக்கப்பட்ட இம்மக்களின் அவலம் நிறைந்த வாழ்க்கைச் சரிதங்கள். இவையாவும் எனது கவிதைகளின் 'கருக்கள்.'

இவர்கள் கொட்டிய கண்ணீரும் செந்நீரும், வேதனைக் குமுறல்களும் விட்டிடும் ஏக்கப் பெருமூச்சுகளும் எதிர்கால கனவுத் தரிசனங்களுக்காக நிகழ்கால வாழ்வின் சுகங்களை எவரெவர்களுக்கோ, அர்ப்பணித்துவிட்டு, வெறுமையை அரவணைத்து ஏங்கும் நெஞ்சங்களும் எனது கவிதையின் ஜீவத் துடிப்புக்கள்!

சுமார் 15ந்து வருடங்களாக எனது கவிதைகளை நூலாக்க வேண்டும் என நான் கண்ட கனவு இன்று நனவாகிறது

இக்கனவை நனவாக்கியப் பெருமை, மலையக கலை இலக்கியப் பேரவையின் செயலாளர் திரு. அந்தனி ஜீவா, திரு. சாரல் நாடன், முரளிதரன் ஆகியோருக்கும் நன்றி தெரிவிக்க கடமைப்பட்டுள்ளேன்

இலக்கிய நெஞ்சங்களையே நம்பி வெளிவரும் இந்நூல் அவர்களின் இதயத்தில் இடம் பிடிக்குமானல் அதுவே அடுத்து அடியை எடுத்துவைக்க ஊன்றுகோலாகும்!

குறிஞ்சி - தென்னவன்

Labukelle U. D.
Labukelle.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழித்திறந் தெழுவாய் !

தூங்கியது போது மினித்
துயிலெழுவாய் மலைமகனே!
விடிந்தது பொழுது
விழிதிறந் தெழுவாய்!

அடிமை இருட்சிறை அதனிற் பலநாள்
மிடிமை யுற்று வேதனைப் பட்டு
கல்லாய் மரமாய் உணர்வுக ளற்று
காலந் தள்ளினுய் இற்றை நாள் வரை
மதியினில் மனிதன் தன்னடி பதித்து
மதியினில் வல்லோன் தானெனக் காட்டிய
காட்சியைக் கண்டும் கருங்கல் சிலையாய்
காலந் தள்ளுவ தழகோ? இனியும்
தூங்கியது போதுமினித்
துயிலெழுவாய் மலைமகனே!

பலநாள் முன்னே உன்னரும் முன்னோர்
பதித்தனர் தன்னடி ஈழமண் ணதனில்
காடாய் மேடாய் கிடந்தயிம் மண்ணை
நாடாய் வீடாய் மாற்றினுர் உழைப்பால்
உழைத்து உழைத்து ஓடாய்ப் போன
ஓரினம் உன்னினம், உலகோர் அறிவர்
எனினுமின் நாட்டில் எவர்தா னுணர்ந்தார்?
எம்மவர் செய்த நன்றியை மறந்தார்!
தூங்கியது போதுமினித்
துயிலெழுவாய் மலைமகனே]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாருக்குப் பொங்கல்

பொங்கல் பெருநாளும் வந்திருச்சி—பணப்
பெட்டிங்க எல்லா நெறஞ்சிவிடும்
எங்களின் வாழ்வு மலர்ந்திடுமா?—நம்ம
ஏழைங்க உள்ளம் குளிர்ந்திடுமா?

பாசிப் பயறு பருப்புக்கு நாளெல்லாம்
பட்டினி யாய்''போலிங்'' நிற்கவேணும்
காசைக் கொடுத்தும் அவுன்சுக் கணக்கிலே
கலப்படமாகவே வாங்க வேணும்!

பச்சை அரிசியும் வாங்க வேணும்—வாழைப்
பழமுஞ் சக்கரையும் வாங்கவேணும்—இந்த
பிச்சைக் காசா வந்தசம்பளம் இதுக்கு
போதுமோ? யோசிச்சி பாருமச்சான்!

ஏட்டிலே எல்லாம் எழுதிடுவார், ''இது
ஏழைங்க கொண்டாடும் பொங்கலென்று''—நம்ம
வீட்டிலே இன்று விளக்குவைக்க, எண்ணை
வேணும் வாங்க வழி பாருமச்சான்!

பாருக் குழைத்திடும் பாட்டாளிக்கா? இல்ல
பஞ்சணை மெத்தையில் படுப்பவர்க்கா?— இங்கு
யாருக்கு வேணுந் தைப்பொங்கல் மச்சான்?—இதை
நல்லா யோசிச்சி கூறுமச்சான்!

* *
*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துயர்க்கதையோ முடியவில்லை

என்னருமைத் தொழிலாளி
இங்குபடுந் துன்பந்தனை
கன்மனதும் உருகிடவே
கவிதைகளும் கதைகளுமாய்
எவ்வளவோ எழுதிவிட்டோம்
இன்னும் எழுதுகிறோம்!—ஆனாலும்
துன்பம் தொலையவில்லை
துயர்க்கதையோ முடியவில்லை

பாட்டாளித் தோழருக்காய்
பாடுபட வந்தவர்கள்
கூட்டங்கள் போட்டுத்தம்
குரல் கிழியக் கத்திவிட்டு
நோட்டுக்கள் சேர்த்து
நெஞ்சங் குளிர்ந்து விட்டார்!-ஆனாலும்
துன்பம் தொலையவில்லை
துயர்க்கதை யோ முடியவில்லை

நாளெல்லாம் பட்டினியாய்
நாடித் துடிப்பிழந்தும்
வேலைநிறுத் தம்பல
வேணுமட்டும் செய்துவிட்டோம்
மாலைபல தலைவர்களின்
மார்மீது சார்த்திவிட்டோம்-ஆனாலும்
துன்பம் தொலையவில்லை
துயர்க்கதையோ முடியவில்லை

எத்தனையோ பேர்கள் வந்தார்கள்
எதையெதையோ சொன்னார்கள்
மெத்தையிலே உன்னை வைத்து
மேன்மையுறச் செய்வோமென்று
அத்தனையும் நம்பியுள்ளம்
ஆசையுடன் தொலையவில்லை
துன்பம் தொலையவில்லை
துயர்க்கதையோ முடியவில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடுவிட்டிங் கெம்மாவி
குடிபோகும் நாள் வரைக்கும்
பாடுபட்டு இம்மண்ணில்
பலவளங்கள் ஈட்டி வைத்தோம்
நாடு நலம் பெற்றிடவே
நல்லபணி செய்து வந்தோம்–ஆனுலெம்
துன்பம் தொலையவில்லை
துயர்க்கதை யோ முடியவில்லை

வெய்யில் பனியென்றும்
வீசும்புயற் காற்றெறென்றும்
செய்யும் அடை மழையும்
பெரிதென்று எண்ணுமல்
செய்யும் தொழிலே
தெய்வமென்றே எண்ணிவந்தோம்-ஆனுலெம்
துன்பம் தொலையவில்லை
துயர்க்கதையோ முடியவில்லை

பிற்போக்குக் காரர்களால்
பின்தள்ளப் பட்டோர்கள்
முற்போக்குக் காரர்நாம்
முறியடிப்போம் இன்னல் என்ருர்
எப்போக்குக் காரர்வந்தும்
இன்னல் களையவில்லை
துன்பம் தொலையவில்லை
துயர்க்கதையோ முடியவில்லை

குறும்பா

குப்பன் வாழ் லயத்தினது கூறை
குளமாக்கும் வீட்டை மழைத் தாரை!
தப்பாது இங்கு வந்த —
தகரமெல்லாம் ஓரிரவில் —
அப்போதே அடையுங் கொழும் பூரை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண் தெய்வம்

கூடையை முதுகில் தாங்கி
கோணலாய் உடல் வளைத்து
சாடையில் விழிகள் நோக்கும்
தன்னிலை பிறழ்ந்து சென்ற
ஆடையை கரங்கள் நீண்டு
அள்ளியே மார்பை மூடும்!
வாடையில் மேனி யாட
வரையிடைக் கால்கள் ஓடும்

சிலீர்' என மோதுங் காற்றும்
சில்லிடும் பனியும் சேர்ந்து
குளிரினில் உடல் நடுங்க
கோதையின் கரங்கள் நீண்டு
தளிரினைப் பறிக்கும் நேர்த்தித்
தவிப்பினில் அழகு ஆடும்!
'கலீர்' என வளைகள் சொல்லும்
கதைகளோ அனந்தம் கோடி

மரகதப் பாய் விரித்து
மயக்கிடும் பசுமைக் காட்சி!
மரங்களோ நெடிதுயர்ந்து
வா! வென அழைக்கும் காற்றில்!
வரிசையாய் நிரையில் நின்று
வளைக்கரம் நீட்டி; நீட்டி!
விருந்துகொள் வனப்பு பெண்கள்
இளந்தளிர் பறிக்கும் காட்சி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தளிரது நிறைந்த கூடை
    தானது முதுகில் ஆட
மலைச்சாரல் மீதெம் பெண்கள்
    வருகின்ற நடையில் வண்ண
இளமயில் கூட்டம் ஆடும்
    எழில் கண்டேன்! இன்பங் கொண்டேன்.
உளமதில் அடடா! எண்ண
    உயர்தமிழ்க் கவிதை யூறும்!

தன்னலம் பேணி டாதார்
    தன்பிள்ளை தன்குடும்பம்
நன்னிலை அடைவதற்கென்
    நாளுமே எண்ணிடாதார்
இன்னிலம் வாழ்வதற்கே
    இராப்பகல் தொழில் புரியும்
பொன்னுள்ளம் கொண்டார் மலைப்
    பெண்கள் நம் தெய்வ மடா!

★

குறும்பா

நெல்லறுத்து கட்டிவைத்தான் பாலா!
நெஞ்சோடு அள்ளுகின்றாள் லீலா!
    கள்ளிருக்கும் முட்டியினை —
    கண்டு விட்ட களிப்பினிலே——
நெல்லறுத்தும் கட்டிவைப்பான் பாலா!

★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொதித்தெழுவோம்!

மனித உரிமைகள் இதுவென உலகோர்
வகுத்த கொள்கையை உடைப்பினில் போட்டு
இனிய முகத்துடன் தார்மீகம் பேசும்
ருத்தி ராசப் பூனைகள் தம்மை
புனித மாம்பொது மைத்துவம் காணும்
புத்து ணர்வுகொண் டெழுந்தொழி லாளர்
அணி தொ டங்கிடும் போர்தனில், வேள்வி
ஆகுதி யாக கொடுத்திட வேண்டும்!

ஏற்றத் தாழ்வுகள் எதுவும் இன்றி;
எவரும் இங்கு சமதை யாக,
வேற்று மையிலும் ஒற்றுமை காணில்
விளையு மோயினப் பகைகள்? இங்கு
ஆற்றல் கொண்டவ ராம்தொழி லாளர்
அவரின் கைகளே நாளை உலகை
மாற்றும் கைகள்! பொதுமைப் பூங்கா!
மலர வைக்கும் வலிமைக் கைகள்!

ஒருவர் வாழ்வை பறித்துத் தன்னவர்க்
குரிமை யாக்கும் உலுத்த செயலினர்;
ஒருவர் உழைப்பை ஒருவர் சுரண்டி
உயரும் வாழ்வை நலமெனச் சொல்வர்;
திருடர், சமூகத் துரோகியர், தம்மை
தூக்கி யெறிந்து, சமத்துவம் பேணும்
"திருநிறை பொதுமை" உலகினைக் காணத்
துடிக்கு மாந்தொழி லாளர் வர்க்கமே!

ஒற்றுமை என்னும் வேள்விக் களத்தில்
உரிமை வேட்கைக் கனலது மூட்டி;
கொட்டும் குருதி நெய்யினை வார்த்து
குறிக்கோள் புதுமலை யகமது காண;
வெற்றி முரசங் கொட்டிப் பகைமேல்
வீழும் அரிமாப் போல்தொழி லாளர்;
கொற்றத் தவிசுகள் தூள்தூ ளாக
கொதித்தே எழுவோம்! புதுயுகம் காண்போம்!



PUBLIC LIBRARY, JAFFNA.
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துடுப்பில்லாத படகு

நன்றி கொன்ற பேர்க்கிந்த
நாநிலத்தில் வாழ்வில்லை
என்றறைந்தான் வள்ளுவன் தன்
இதயக் கருத்தை குறளினிலே
இன்றேஇன வெறியர் எம்மை
ஏகச் சொன்ன போதும் நாம்
தொன்று தொட்டு வாழ்ந்துவரும்
தொடர்பும் அற்றுப் போய்விடுமோ?

புலியும் கரடி வாழ்ந்த அடர்
புதர்கள் மலிந்த வனமெல்லாம்
வலிமை மிகுந்த எம்கரத்தால்
வளமை கொழிக்கும் நாடெனவே
பொலிவுபெற்ற பின் எம்மை
போகச் சொன்னால் சிரியாரோ?
அழிவை நாடி இந்நாட்டின்
அரசும் போதல் நலமில்லை!

உதிரம் கொட்டி செடிகள் நட்டு
உயிரைக்கொடுத்து வளர்த்திட்டோம்
சிதற அடித்து எம்மினத்தை
சீரழிக்க எண்ணி விட்டார்!
மதியிலாத இவர் செய்த
வஞ்சக ஒப்பந்தமிதே
துடுப்பிலாத படகினிலே
துணியுமாறு போலுமே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்பள நாள்!

பத்தாந் திகதியில் சம்பளமாம், சின்னப்
பையனுக் கோ,பெருங் கொண்டாட்டம்!
''மொத்தமாக சம்பளம் வாங்கி டுவா, அம்மா
முழுசா ஒருரூவா தந்திடுவா''! என
சித்தம் நிரம்பிய ஆசையிலே. தன்
தோழர் பலருக்கும் சொல்லி வைத்தான்!
முத்தம்மா சம்பளம் வாங்கி வந்தாள்—அவன்
முதுகுல நாலு கொடுத்து வச்சாள்!

''வாழைப் பழம்.. மிட்டாய் முறுக்கு...வடை....!
வாங்குங்க! வாங்குங்க!'' என்று, இந்த
ஏழைங்க காசைப் பிடுங்கிட வேவந்த
வியாபாரி கள் இடும் கூச்சல்களும்
ஊளை ஒழுக வாய் எச்சில் வடிய, தன்
உள்ளத்தி லேபெரும் ஆசையுடன்—அம்மா
சேலைமுந் தானையைப் பற்றிக்கொண் டேவரும்
செந்தா மரையோ சினுங்கிடுவர்ள்!

''சீவி முடிச்சி, சிரிக்கலேன்னு? நல்லா
சிங்காரம் பண்ணி தளுக்கலேன்னு?
பாவிப் பயஅரைப் பேருபோட்டான்? அவன்
பாடையி லேபோக, மாடாக என்
ஆவி துடிக்கச் சுமந்துவந்தும், தினம்
அரைப் பேரு போட்டுல்ல வச்சிருக்கான்!''
கேவி யழுது புலம்பிக்கொண் டேவரும்
குப்பாயி நெஞ்சில் பெருநெருப்பு!

''காமாச்சிக்கு எம்பத் தஞ்சி ரூவா அவ
கையில வாங்கிட்டா பாத்தியாடி? சுத்த
சோமாறி வேலைக்குப் போகமாட்டா, போனு
சொத்தவேலை, துப்புப் பட்டிடுவா!
ஏமாளி கந்தன் அவபுருசன்—அவ
இழுத்த இழுப்புக்கு வளையுருனே!'' என
ரோமஞ் சிலிர்க்க வசைபாடும் சின்ன
ருக்கு மணிக்கோ, வயித்தெரிச்சல்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''சீட்டுப் பணத்த நான் கட்டுவேனு? பட்ட
சில்லற கடன அடைப்பேனு? அந்த
சேட்டுப்பய மலே போலவந்து பெருந்
தொல்லேக் கொடுப்பான் கடன்கேட்டு.
ஈட்டுக் கடையில வச்ச நகையினே
இந்த மாசம் திருப்பலன்னு, ஏலம்
போட்டுடு வானும்! என்னசெய் வே''னென
புலம்பும் வள்ளியொரு பக்கத்திலே!

''பள்ளிக்குடம் போகும் சின்ன மகளுக்கு
பாவாடை ரவிக்கை தைக்க வேணும்
வள்ளி, மகளின் சடங்குக்கு அஞ்சிரு
வா, வாச்சும் மொய்யா எழுதிடனும்
கொள்ளேக்கா ரப்பய ஒத்த கடைக்கும்
கொடுத்திட னும் போன மாசக்கடன்''
உள்ளத்தில் எண்ணி அடுப்பரு கில் சும்மா
உட்கார்ந் திருக்கிருள் பாப்பாத்தி!

''நாட்டுக்குப் போயி குடிச்சிப்புட்டு, சில
நாதாறிப் பசங்கள கூட்டிவந்து, கரு
வாட்டுக்கறிவேணும் என்று, என்னேயிந்த
மனுசன் புடுங்கியே தின்னப் போருன்!
வீட்டுல என்ன சொகத்த கண்டேன்? இந்த
வெத்து மனுசன கட்டிக் கிட்டு?' என
நீட்டி முழக்கி வசை பாடும் சின்ன
நீலா வதிக்கோ பெருங் கோவம்!

சம்பள நாளிது வீட்டி லிருக்கிற
சந்தோச மெல்லாம் பறந்திடும் நாள்!
வம்பும் தும்புகளும் பேசிடும் நாள்! இவர்
மண்டை யுடைந்திடும் நாளிதடா!
கம்புத் தடிகளே தூக்கிடும் நாள் பொலிஸ்,
கச்சேரி, கோர்ட்டுக்கு போயிடும் நாள்!
வெம்பியழுதிடும் பெண்களின் குரல்கள்
வீடுகளில் கேட்கும் நாளிதடா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாள் வரும்!

மண்ணைப்பொன் னாக்கிய மலையக மக்களின்
வலிமை மிகுந்த கைகள்—உயர்
விண்ணைய ளாவியங் கெண்ணரும் அற்புதம்
விளைக்கும் நாள் தூரமில்லை!

கவ்வாத்து வெட்டிடும் கைகளிதுவென
கண்டு நகைக்காதீர்—இது
செவ்வாய் கிரகமும் சென்றங்கு கற்பகத்
தேயிலை நாட்டிடுமே!

ஆடுகள் மாடுகள் போலவே வாழ்ந்தவர்
அடிமைத்தளை யறுத்தே,—வருங்
கேடுகள் நீக்கி உலகினி லேபெருங்
கீர்த்தி யடைந்திடுவார்!

உரிமையி லாதெமை ஒதுக்கியே வைத்து
உதாசினம் செய்திடினும்—எம்
அறிவின் துணையால் உலகமெல்லாம் புகழ்
அடைந்திடும் நாள் வருமே!

இனவெறி யூட்டி இவர்களின் வாழ்வை
எரியிட் டழித்திடினும்—உயர்
மனத்தின் வலியால் உலகினி லே புது
வாழ்க்கை அமைத்திடுவார்!

சத்தியம் வாய்மை சாய்ந்ததில் லைபுவி
சரித்திரம் கண்ட உண்மை!—அநீதி
எத்தனை காலங்கள் வாழ்ந்திடும்? நாமின்பம்
எய்திடும் நாள் வருமே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொங்கி எழுந்திடுவோம் !

நாட்டின் வருவாயில் நூற்றுக்கு எண்பது
நாங்கள் உழைத்தடா! — செல்வம்
ஈட்டி கொடுத்தநம் வீட்டிலோ வறுமை
இருள் நிறைந்ததடா!

நாட்டைக் கடனின்றி மாற்றுவோம் என்றவர்
தீட்டிய திட்டங்களால் — மலை
நாட்டுத் தொழிலாளர் கூட்டமெல் லாங்கடன்
மூட்டை சுமக்குதடா!

வெங்கலப் பாத்திரம் தங்கநகைகளும்
வித்து முடித்துவிட்டோம் — உயர்
மங்கலத் தாலியும் வித்து மனைவியின்
மனசையும் முறித்து விட்டோம்!

சோசலிஸம்மெனும் மோசலிசத்தினால்
சோற்றுக்கு பஞ்சமடா! — இங்கு
பேசும் இஸமல்லாம பாட்டாளி வாயில் மண்
போடும் இஸங்களடா!

உற்பத்தி என்றதோர் பல்லவி யைநாளும்
ஒப்பாரி வைப்பவர்கள் — நாட்டின்
கற்பகத் தருக்களாம் நம்மவர் சொரியும்
கண்ணீரைக் காணகிலரே!

ஏழை அழுங்கண்ணீர் கூரிய வாளென்ப
தென்றும் வீண் போனதில்லை — அந்த
வேளை வருமென நாளை எண்ணி நாமும்
வீண்காலம போக்குவதோ?

பஞ்சமும் நோயும் பட்டினிச் சாவும்
பாட்டாளி எங்களுக்கோ? — தினம்
கொஞ்சிக் குலவிக்கூத் தாடி மகிழ்வ தெம்
கூட்டாளி என்பவரோ?

பொங்கிடு! பொங்கிடு! பொங்கி யெழுந்திடு!
புத்துல கம்சமைப் போம்! — நாம்
இங்கு படுந்துயர் மங்கி மடிந்திட
பொங்கி எழுந்திடு வோம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எந்நாளோ ?

வறுமை என்னும் சேற்றில் புதைந்து
வாழ்வதற் கேதும் மார்க்க மின்றியே
சிறுமை யுற்றுடல் தேய்ந்து நலிந்து
தேயிலைக் காக யாவு மிழந்து
அருமை உயிரையும் அர்பணிக் கின்ற,
அந்தோ! என்னரும் மலையகத் தோழா!
உரமும் திறமும் உள்ளவ னுய்நீ
உரிமைகள் யாவும் பெறுவதெந் நாளோ?

உரிமை அற்றின் நாட்டினிற் பற்று
உள்ளவ னுக உழைத் தே வந்தாய்!
சிறுமைகள் கோடி உள்ளது அன்றி
சிரிதெனும் இன்பம் அடைந்தனை யோ? நீ!
எருமையைப் போல அடிமைச் சேற்றில்
என்றும் கிடந்து உழன்றது போதும்!
ஒரு அணி நின்று உரிமைகள் பெறவே
உணர்ந்தெழுந் தேநீ வருவது எந்நாள்?

ஏழையர்க் காக உழைப்பதெம் கடனென
எங்கும் மார் தட்டிய கூட்டமோ இன்று
கூழைக் கும்பிடு போட்டும் பொய்யாய்
கூட்டங்கள் தோறும் சமத்துவம் பேசி
நாளும் தம்முடல் வளர்த்திடு கின்ற
நடிப்புத் தலைவர்க ளால்எம் வாழ்வு
மேலுந் தேய்ந்திட விடோமினி, எனநீ
வீறுகொண் டெழுந்தே வருவதெந் நாளோ?

★★
★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தனுக்கோர் விண்ணப்பம்!

போதிமரத் தூயவ, நின்
பொன்னடிக் கோர் விண்ணப்பம்;
யாதுயிர்க்கும் தீதிழைக்கா
நின்கருணை மனத்துதித்த
தீதறும் நற் கொள்கையெலாம்
செகத்தோரின் உளங்களிலே
சோதி மணி விளக்கெனவே
சுடர் விட்டு ஒளிவீச—

எத்தனைநாள் தனிமையிலே
ஏங்கித் தவித்திருந்தாய்!
பித்தனைப்போல் ஊரூராய்
பிறர் நகைக்கச் சுற்றிவந்தாய்]
கொத்தாடும் குழலுடையாள்
கோதை யசோதரையை;
சித்திரப்பூச் சிரிப்புதிர்க்கும்
செல்வத் திருமகனை

எண்டிசையும் மன்னாவந்து
இருதாள் வணங்கும்பெரும்
மண்டலத்தை ஆள்கின்ற
மணிமகுடம் தனைத்துறந்தாய்]
தொண்டுபுரிந் தேழைகளின்
துயர்துடைக்க, மக்கள் மனம்
மண்டு மிருள் மயக்கறுத்து
மணி விளக்கை ஏற்றிவைத்தாய்!

அன்பு எனும் நீரூற்றை
அனைவருக்கும் சலியாது
என்புருக வாரிநிதம்
இறைத்தாய்! உயிரினங்கள்
தென்பில் திளைத்திருக்கும்
திருக்காட்சி! கண்டுமனம்
இன்புற்றாய் அந்நிலையே
இம்ப ருறும் சொர்க்க மென்றாய்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ கண்ட கனவெல்லாம்
நிச்சயமாய் இந்நாட்டில்
தான்தோற்று விட்டதையோ!
தர்மத்தின் உறைவிடமே!
நாணின்றி நின்பெயரை
நாளெல்லாம் கூவி விட்டு
தீ நின்ற நெஞ்சினராய்!
தீங்குபுரி வோர்மிகுந்தார்!

வஞ்ச நெருப்பினையே
வைத்தொருசார் மக்களினை
நஞ்செனவே வெறுக்கின்றோர்
நாட்டின் தொழுநோயாம்!
பஞ்சசீல நெறிதனையே
பற்றும் மனிதரிங்கு
பஞ்சமோ? நின்திருவாய்
பகர்ந்த மொழிகளெல்லாம்?

கடலில் கரைத்து விட்ட
காயமென ஆனதுவே!
விடிவற்ற பேரிருளில்
வீழ்ந்துலகம் மாயாது
வடிவுற்ற பேரொளியாய்
வந்தாய்! அந்றணன் நீ!
மிடியுற்ற உயிரினங்கள்
மீட்சியுற்ற துன்வரவால்...!
அடியற்ற மரம் போல
ஆனதிங்கே, நின்நெறிதான்!

மன்னுயிரும் தன்னுயிராய்
மதிக்கின்ற வான்கருணை
நின்னுடைய மனம், இங்கோ
நின்பெயரைத் தினங்கூறி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னலத்தை வளர்த்திடுவார்!
சான்றோராய் நடித்திடுவார்!
உன்புனித கொள்கையெலாம்
உடைப்பினிலே போட்டிடுவார்!

''மணவறைக் கோலம் கண்டு
மகிழ்ந்திடு வோ''மென்றின்பக்
கனவினைக் கண்டு வாழ்ந்த
கன்னியர் தம்மையெல்லாம்
பிணவறைக் கனுப்பி விட்டு
பேய் கூத்து ஆடினார்கள்!
கணவனின் முன்னே பெண்டிர்க்
கற்பினைச் சூறையிட்டார்!

தேனீயாய்ப் பாடுபட்டு
சேர்த்துள்ளச் செல்வமெல்லாம்
கேள்விகள் இன்றி கொள்ளை
கொண்டனர் கொடுமையாளர்!
பால்மணம் மாறிடாத
பாலகர் தமையும் கொடு
வாள் கொண்டு தாக்கினார்கள்
வன்கொடு மையாளர்கள்!

அன்று இந்த ஈழ நாட்டினில்
அனுமன் வைத்த தீ . பரந்ததுவே!
இன்று. மலையக மக்களின் வீடுகள்
எரித்து மகிழ்ந்தவர் உந்தனடியவர்!
கன்றும் தாயும் கதறி அழுதிட
காண்பவர் நெஞ்சம் பதறித் துடித்திட
கொன்று தீர்த்து களிவெறி கொண்டனர்!
கோடி உண்மை! நின் பெயர் சொல்லும்
[கூட்டமே!
ஊர்க்காவல் படையிருந்தும்
ஓலமிட் டழுதோர் குரல்
கேட்காத செவிடர் ஆனார்!
கெடுதிசெய் எண்ணத்தாலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீக்கோலைப் பிடித்த கைக்குத்
துணையாகிப் போனு ரந்தோ!
பார்க்குள்ளே எமதூர்க் காவற்
படைப்பெரு மைதான் என்னே!

சட்டங்கள் இருந்தும், நீதிச்
சபைகள்தாம் இருந்து மென்ன?
பட்டங்கள் பெற்ருேர் உயர்
பதவியில் இருந்து மென்ன?
துட்டரின் ஆட்சியன்ருே
தொடர்ந்தது! நாட்டி லன்று!
கொட்டிய எங்கள் செந்நீர்க்
குருதிதான் ஓடக்கண்டோம்!

புத்தனே! நின்கருணைப்
பொய்கைதான் வரண்டு போச்சோ?
நித்தமும் கருணை அன்பு
நீரூற்றி நீ...வளர்த்த
சத்திய விருட்சம் மண்ணில்
சாய்ந்ததோ! மனுக்குலத்தின்
உத்தமா! நினது செவ்வாய்
உரைத்த பொன் மொழிகளெல்லாம்—
இத்திரு நாடதனில்
ஏட்டினில் சுரைக்காய் ஆச்சே!
பத்தரை மாற்றுச் செம்பொன்
பரிதியாய்! மீண்டுமிந்த
நித்திலக் கோர்வை யன்ன
நீள்புகழ் ஈழ மண்ணில்,
உத்தரிப் பாயிங் குள்ளோர்
உள்ளந்தான் புனிதம்காண!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறவு வேண்டும்

ஊன் பொதியை சுமப்பவர்க்கு வாழ்வு உண்டாம்
உழைப்பவனைச் சுரண்டுபவர்க் கேற்றமுண்டாம்
வான்முட்டும் மாளிகைகள் பொன் பொருள்கள்
வறியவரின் உயிர்குடிக்கும் வஞ்சர்க்குண்டாம்
வீண்பெருமை பேசியிங்கு உடல் வளர்க்கும்
வீணர்களுக் கின்நாட்டில் மதிப்பு முண்டாம்
ஏனில்லை உழைப்பவர்க்கு இவைகளெல்லாம்
இதுதானு நாம்காணும் சமஉரிமை

பொய்மைக்குத் துணைநின்று குடல் நிறைத்து
பொருளுக்குத் துதிபாடி புகழ் வளர்த்து
கயமைக்கு பேர்போன மனிதரெல்லாம்
கனவானுய் தனவானுய் வாழ்ந்திருக்க
நன்மைக்கே துணைநின்றின் ணுடுவாழ
நாளெல்லாம் உழைத்தவர்க்கு இடமில்லையா
உண்மைக்கும் அன்பிற்கும் தொடர்பில்லையோ
உழைப்புச்கும் படிப்புக்கும் உறவில்லையோ

உழைப்புக்கும் படிப்புக்கும் உறவில்லையா-வாழ்
உரிமைக்கும் எங்களுக்கும் உறவில்லையா
வளமைக்கும் வாழ்விற்கும் வழியில்லையா-எம்
வறுமைக்கும் ஏழ்மைக்கும் முடிவில்லையா
களைப்பிற்கும் சோர்விற்கும் கணக்கில்லையா-தூய
கடமைக்கும் பணிவிற்கும் மதிப்பில்லையா
தொழிலுக்கும் பொருளுக்கும் தொடர்பில்லையா உயிர்த்
தியாகமொடு சேவையிங்கு தேவையில்லையா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதியென்றும் நேர்மையென்றும் சொல்லித் திரிவார்
நிதம் உழைக்கும் பேரைக்கண்டு எள்ளி நகைப்பார்
சாதிரெண்டு என்றுபல சான்று கூறுவார்
தாழ்ந்தவர்கள் எனப்பலரை தள்ளிமிதிப்பார்
மேதியென நாள் முழுதும் நீரில் கிடந்தே
வேலைசெய்யும் ஏழைகளை வெறுத்தொதுக்குவார்
மேதைகள் நாம் என்றுபல விளம்பரஞ் செய்தே ஒரு
வேலையற்ற பேர்கட்கிந்த நாடு சொந்தமா?

உழைப்புக்கும் படிப்பிக்கும் உறவு வேண்டும்—வாழ்
வுரிமைகள் பெற்று நாம் வாழ வேண்டும்—ஏய்த்து
பிழைப்போரின் வாயில்மண் விழ(வும்) வேண்டும்—சூது
பொய் வஞ்சம் பகை யாவும் ஒழிய வேண்டும்
துளிகூட வேற்றுமைகள் இன்றி மக்கள்
சுதந்திரமும் சமத்துவமும் பெறவும் வேண்டும்
மலைமக்கள் வாழ்விங்கு சிறக்க வேண்டும்
மறுமலர்ச்சி யவர்வாழ்வில் பூக்கவேண்டும்

★

குறும்பா

தேவானை நட்டதிந்த ரோஜா!
தினந் தண்ணீர் ஊற்றிவந்தான் ராஜா!
ஏவாளை மிஞ்சும் வண்ணம் —
தேவானை வந்து நிற்பாள் ...
நோவாமல் பூத்தாளோர் ரோஜா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையகப் பெண்ணாள்!

குன்று தோறும் ஏறிடுவாள்
    எங்க மலைப் பெண்ணாள்!—கடுங்
குளிரினிலே கொழுந்தெடுப்பாள்
    எங்க மலைப் பெண்ணாள்!

பேய்மழையில் காற்றினிலே
    எங்க மலைப் பெண்ணாள்!—வளம்
பெருக்கிடவே உழைத்திடுவாள்
    எங்க மலைப் பெண்ணாள்!

தனக்கெனவே வாழ்ந்திடாதாள்
    எங்கள் மலைப் பெண்ணாள்! தேத்
தளிரைக் கிள்ளி ஈழமதை
    வாழவைக்கும் பெண்ணாள்!

பால் மறக்கா குழந்தை தன்னை
    பதற வைத்தும் மலையில்—இரு
தோள் வலிக்க கூடை சுமந்து
    தொழில் புரியும் பெண்ணாள்!

படுப்பதற்கு கிழிந்த பாயும்
    படங்கும் இல்லா பெண்ணாள்
உடுப்பதற்கு கிழிந்திடாத
    சேலையில்லா பெண்ணாள்!

உழைப்பிற் கேற்ற கூலியில்லாள்
    உயர்ந்தமலைப் பெண்ணாள்;—நாளும்
பழிப்பும் ஏச்சும் பேச்சும் கேட்டு
    பதைக்கும் நெஞ்சப் பெண்ணாள்!

தேயிலைக்கும் வாயிருந்தால்
    சொல்லும் இவள் கதையை—நாள்
தோறும் எண்ணி அழும். இவளின்
    துயர் மிகுந்த நிலையை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்துலகம் படைத்திடுவோம்!

உன்னுடல் மீது ஏறி மிதித்து
உயர்ந்தவர் வாழ்வெல்லாம்—இனி
மண்ணுடன் மண்ணாய் கலந்து மறைந்து
மலர்ந்திடும் சமதர்மம்!

பொன்னென சிலருடல் பேணிட, நாளும்
உன்னுடல் வதைத்தவர்கள்,—இனி
உன்னடி வீழ்ந்து உயிர்த்திடும் நாள்வரும்
உயர்ந்திடும் சமதர்மம்!

வயலினில் சேற்றில் மாடுடன் மாடாய்
வதைபட் டேபயிர் வளர்த்தாய்—இதை
அயலினில் ஒருவர் அறுவடை செய்யும்
அநீதி அழித்திடுவோம்!

மாளிகை உயர்ந்திட கல்லுடன் கல்லாய்
வதைபட் டேசுவ ராளுய்!—நீ
வாழ்விட மின்றி வீதிக ளோரம்
வாடும் நிலைமாற் றிடுவோம்!

ஏழையர் செல்வர் என்றிடும் பேதம்
இல்லா தொழிந்திடச் செய்வோம்! எம்மில்
தாழ்வுயர் வென்னும் சாக்கடை தூர்த்து
சமத்துவப் பூங்கா அமைப் போம்!

குறும்பா

ஆயம்மா வாகவரும் பெண்கள்!
அவர்களுக்கோ நாவலிலே கண்கள்!
தாயம்மா மீனுச்சி —
சரசுவதி பிள்ளைகளின் —
வாயினிலே நிறைந்திருக்கும் மண் கல்!



தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொங்கி எழு சிங்கமென!

மலைநாட்டுத் தமிழினமே ஒன்று சொல்வேன் கேளாய்! உனை
வட்டமிடும் கூட்டமெல்லாம் வஞ்சகரென்றறிவாய் நீ
சிலைபோல உணர்வற்ற கல்லானதாலே—தங்கள்
சீரான வாழ்வுக்கு பொருள் சேர்க்க கட்சி
வலை போட்டு பிடித்துன்னை வைத்திருக்கும் கூட்டம் தம்
வால்விற்குப் பலியாக்கி வந்ததை நீ உணர்வாய்
பலியாடு போல நீ தலைகுனிவதோடா?
பாய் புலியாய் முன்னே வா பகைமை பறந்தோடும்

தலைவரெனச் சொல்லிப்பெருந் தலைக ளிங்கு வந்தார்
தனக்குவியல் சேர்ப்பதிலே நாட்டமெலாங் கொண்டார்
பலகரம் சேர்த்து பெரும் பதவிகளும் கண்டார்
பாட்டாளிக் கூட்டமெல்லாம் என்ன சுகம் கண்டார்?
விலைபேசி எம்முரிமை விற்றுப் புகழ்தேடி நடு
வீதியிலே நிற்க வைத்து அரசவைக்குச் சென்ருர்
மலைநாட்டுச் சோதரனே உன் கடமை என்ன? உன்
மரபினர்கள் மானமுடன் வாழ்வற்கு எண்ணு

மண்ணதிர விண்ணதிர வாய்ச்சிலம்ப மாடி
மாண்டொழிந்த பழைமையினை இன்னுமிங்கு கூறி
கண்ணெதிரே கொடுமை கண்டும் கற்சிலையாய் மாறி
காரேறி பவனிவரும் கனவான்கள் கூட்டம்
உன்னுதிரம் உறிஞ்சியுடல் உப்புகின்றதை நீ
ஓர் நிமிடம் சிந்தித்தால் உன் வாழ்வு மலரும்!
புண்ணதனில் வேல்பாய்ச்ச பொறுத்திருப்ப தோடா?
பொங்கியெழு சிங்கமென எந்தன் மலைத்தோழா!

சூதாட்டக் காய்போல இங்கு மங்கும் மாற்றி
சூழ்ச்சியினுல் ஆடுகிருர் சீமான்கள் கூட்டம்
நீதாஞ இங்கவரின் விளையாட்டு பொம்மை?
நினைத்தாலே நெஞ்செல்லாம் வேகின்ற தேடா?
வேதாந்தம் பேசியிது விதியென்று நம்பி
வீண்காலம் கழித்ததினி போதும்விரைந் தெழுடா]
மாதாந்தம் நீகொடுக்கும் வரிஇவர்க்கு எதற்கு?
வையகமெல் லாமிவர்கள் உலாவருவ தற்கோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசை மச்சானுக்கு!

ஆசை மச்சான் உங்கள் கால்களுக்கு—பல
ஆயிரங்கோடி நமஸ்காரம்—செய்து
ஆசைமனைவிகா மாச்சி எழுதிடும்
அன்புக் கடுதாசி என்னவென்றால்,

ஆண்டவன் கிருபை யாலும் உங்கள்
ஆசீர் வா தத்தாலும் நாங்கள் சுகம்!—கடல்
தாண்டி இருக்கிற உங்க சுகத்துக்குத்
தான் கடவுளை வேண்டுகிறேன்!

கட்டிய மனைவி நானிருக்க—செங்
கரும்பாக ரெண்டு பிள்ளையிருக்க—எம்மை
விட்டுப்போன பதினஞ்சி வருசமா—நான்
வேதனைப் பட்டதை யாரறிவார்?

'காசு பணத்தோடு வந்துவிடு—இங்கு
காணி பூமி வாங்கி வாழ்ந்திடலாம்!'—என்ற
ஆசை நெறைஞ்சஉம் காயிதம் கண்டு நான்
அழுவதா? சிரிப்பதா? தெரியவில்லை.

இலங்கை நெலமை தெரியாமல்—நீங்க
எழுதியிருப்பதை பார்த்துவிட்டு—உமக்கு
வெளங்கப் படுத்தயிந் தக்கடுதாசியில்
வெவரமா சொல்லுறேன் கேளுமச்சான்!

பாம்பும் புலியும் படுத்திருக்கும்—பெரும்
பாழான காடெல்லாம் சீருபண்ணி
தேன்சொரியும் மலர்ச் சோலைகளாய் நாங்க
செய்துவச்சும் பலன் இல்லை மச்சான்!

தேயிலை ரப்பரும் நட்டு வச்சோம்—இந்த
தேசம் வளம்பெற நாமுழைச்சோம்—ஒரு
நாயும் மறக்காது நன்றி மச்சான்!—இந்த
நாட்டு மனுசர் மறந்து விட்டார்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூறு வருசமா நம்ப இனம்—இங்கு
நெஞ்சத்தில் வஞ்சனை இல்லாமல்—தேயிலை
நூறுக்கு உரமாய் ஆகி வந்தும்—இந்த
தேசம் நமக்கென்ன செஞ்சிருச்சி?

உச்சிமலையிலே வேலைசெஞ்சோம்! —அங்கு
ஊத்தும் மழையிலே நனைஞ்சிருந்தோம்!—சிறு
குச்சிகுடிசையில் வாழ்ந்திருந்தோம்—நம்ப
கூட்டம் இன்னாட்டிற்கு பாரமானோம்

வாழும் உரிமைகள் ஏதுமில்லை—நாங்க
வாழ்வதற்கும் நல்ல வீடுமில்லை,
நாளும் பொழுதும் கவலைப்பட்டு—இங்கு
நாயா உழைப்பதில் ஓயவில்லை!

ஏடுபடிக்க நினைச்சதில்லை—நாலு
எழுத்து படிக்க தெரிஞ்சதில்லை—ஆனால்
பாடுபட்டோம் பிறர் வாழ்வதற்கே
பட்டினி கிடந்தோம் பராரியானோம்

ஏணியைப் போலவே நாமிருந்தோம்-பலர்
ஏறிச் செல்லபடி நாமானோம் இன்னும்
ஆணியடிச்சது போல அசையாது
அப்படி யேயிருக் கோம்மரமாய்!

சங்கங்கள் ஏராளம் உண்டு மச்சான்—நாங்க
சண்டையும் சாடியும் போடுதற்கு
எங்கப் பிரச்சினை தீர்ப்பதற்கோ—இங்கு
யாரும் மெனக் கெடவில்லை மச்சான்

பாட்டாளிக்காக உழைக்கிறோம் நாமென்று
பட்டயங் கட்டியே வந்தவர்கள்—பண
மூட்டைகளாகவே கட்டிக்கிட்டார்—எங்க
மூஞ்சியி லேகரி பூசி விட்டார்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏடுகளில் பல மேடைகளில்—பலர்
எழுதியும் பேசியும் வந்தாங்க—இந்த
நாட்டின் முதுகு எலும்பு நீங்களென்று
நன்ருகப் பேசி நடிச்சாங்க!

கொழம்பு தண்ணிக்கும் பருப்புமில்லே—கஞ்சி
கொதிக்க வைக்கவும் அரிசியில்லே—இன்று
செலவுக்கும் கையிலே காசுயில்லே—எங்க
சேதியோ இப்படி இருக்கு மச்சான்!

அன்ருடம் காய்ச்சி குடிப்பதற்கே நாங்க
ஆளாப் பறக்குற நாளேயிலே—'பணங்
கொண்டாந்துடு' என்று சொல்லுறீங்க—இங்கு
குவிச்சியா பணத்த வச்சிருக்கோம்?

தாயா நெனேச்சி நாம் வேலேசெஞ்ச அந்த
தங்கமலேயக மண்ணேவிட்டு—நாளே
போயாக வேணுமாம் அந்தமான் என்ருெரு
பூமிக்கு தோட்ட சனங்களெல்லாம்!

தோட்ட சனங்கள் வயித்துயெரிச்சலே
சொல்லத் தொடங்கிஞ வாய்வலிக்கும்—இந்த
ஏட்டிலே கொஞ்சம் எழுதிவிட்டேன்—மீதி
இன்ஞெரு சமயம் எழுதுகிறேன்!

★

குறும்பா

முள்ளெடுத்து தோள்மீது வைத்தான்!
முத்து, வள்ளி பார்வையிஞல் தைத்தாள்!
செல்ல சில வாரங்கள் ...
தேயமலே யோரங்கள்
வள்ளி வயிற் தள்ளிடவே கைத்தாள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிபாடு மச்சான் !

கோயிலே எங்கெங்கும் கட்டுறிங்க! அதன்
கும்பாபி ஷேகமும் பண்ணுறிங்க! கல்வி
கோயிலைத் தோட்டங்க தோறு மமைத்திட
கொஞ்சமும் நெனேச்ச துண்டோ? மச்சான்!

சாதிப் பிரிவுகள் வைத்துக்கொண் டேதர்ம
சாத்திரப் பெருமை பேசுறிங்க! நீங்க
ஓதுகின்ற நீதி நியாயமெல் லாமிங்கு
ஒருத்தருக் கில்லே பொதுவாம் மச்சான்!

எந்த இனங்குல மாயிருந் தாலென்ன
எல்லோரும் மனித வர்க்கம் மச்சான்! - நாம்
சொந்தச கோதர் போலவே வாழ்ந்திடில்
சொர்க்மிந் நாடு கேளுமச்சான்!

இந்த உலகம் பொதுவுடமை இதில்
எல்லோரும் வாழ உரிமை யுண்டு. எனில்
சொந்தமென சிலர் மட்டுஞ் செல்வங்களே
சேர்த்துக் கொள்ளுவ தநீதி மச்சான்!

மாதர்க்கு உண்டு சுதந்திரம், என்று, முன்
மாகவிப் பாரதி சொல்லி வச்சார் - மலே
மாதர்க்கு உண்டோ சுதந்திரம் இன்றுங்கள்
மனசுல சிந்திக்சிப் பாரு மச்சான்!

பெண்கள் விடுதலே என்றுநிதம் சும்மா
பேசுவதில் பயன் இல்லே மச்சான்! உங்க
பங்கமில் லாஉயிர் பாட்டுத் திறத்தாலே
பாலிக்கனும் மலேநாடு மச்சான்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்கள் விடுதலைக் காக கவிதையில்
பேசிய பாவலன் பாரதி யார் எனில்
எங்கள் மலையகப் பெண்கள் விடுதலைக்
கெத்தனைப் பாரதி உண்டு மச்சான்?

மானஞ்சிறிதாக வாழ்வு பெரிதாக
வாழும் மனுசர்கள் ஏரர்ளம் இந்த
ஈன மனுசர்கள் உள்ளவரை எமக்
கேது விடுதலை சொல்லு மச்சான்?

தேயிலை யாம்பசு மேடையி லேநடம்
செய்யா தொழிந்திடில் எம்கரந்தான்
பேயுல வுஞ்சுடு காடென தோட்டங்கள்
போகும், இதை கவி பாடு மச்சான்!

குறும்பா

தொழிற் சங்கத் தலைவர் தண்ட பாணி!
தொழிலாளர் இவர்க்கு ஒரு ஏணி!
விழிசிவக்க, முகஞ்சிவக்க
மேடைகளில் பேசிடுவார் .....
தலைவர் இவர் இன்றுகங் காணி!



PUBLIC LIBRARY, JAFFNA.
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுயுகம் காண எழடா!

இன்னுமா தூக்கம்? எழும்படா தம்பி
இதுநவ யுகமடா தம்பி
முன் செலும் வேகம் உலகினர் நெஞ்சில்
முகிழ்த்தது மலர்தலைக் காண்பாய்
செந்நெல் விளைத்தவன் வெறும்வயி ேறாடு
சோர்ந்து பசியில் துடிக்க
இன்னொரு மனிதன் உழைக்காதிருந்தும்
இன்பத் தில்திளைப் பதுவோ?

நீதியும் தர்மமும் நித்தமும் பேசி
நிதமுறைப் போர்தமை வதைப்பார்
சூது வழியினில் ஏய்க்கும் மதியினர்
சொல்லும் காரணம், விதியாம்!
''ஏதும் சிந்திக் காதே இறை வன்
இட்ட ஆணை இதுவாம்''
பேதை போல இதைநம் புவதோ?
புதுயுகம் காண்பதற் கெழடா!

'இறைவன் தன்மையை,' இனிதுறக் கேட்போர்
எவரும் மயங்கிடச் சொல்வார்!
நறுந்தமிழ் மொழியில் ஏடுகள் தோறும்
நயமுற எழுதிக் குவிப்பார்;
''பிறருக் கென்றே இவையெலாம்'' என்றும்
பேணார் சிறிதும்தம் வாழ்வில்;
கறைபடர் நெஞ்சக் கயவரை ஒழித்து,
காண்பாய் புதுயுகம் தம்பி!

சாதிகுலங்கள் சமயம் இனங்கள்
தமதெனில் சேர்ந்துற வாடும்
மேதி பனிதரை விடமனத் தீயரை,
வேரற ஒழித்திடும் செயலே
நீதி, புதுயுகத் தர்மம், இதைநீ
நெஞ்சில் பதித்தெழ தம்பி!
சாதி சமயம், தாழ்வுயர் வில்லா
சமத்துவப் பூங்கா சமைப்பாய்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழகென்று சிரிக்கு மிங்கே!

பஞ்சு முகில் தூங்குகின்ற
பசிய நெடும் வரைகளிலே
கொஞ்சி யிசை பாடி யின்பங்
கூட்டுங் குளிர் அருவிகளும்,
மஞ்ஞையென அசைந்து வரும்
மலையகத்து மாதர்களை
அஞ்சலி செய் மரங்களெலாம்
அழகென்று சிரிக்கு மிங்கே!

பொன்னுருக்கி வார்த்து விட்ட
பூமியிலே எங்கள் மலைப்
பெண்ணுருகி விட்ட கண்ணீர்
பேராருய் ஓடுவதும்
தன்னுருவம் மாற்றித் மலைத்
தாயவட்கு எழிலூட்ட
மண்ணுருவம் இவர் வாழ்வில்
அழகென்று சிரிக்கு மிங்கே!

பச்சை வண்ணப் பட்டுடுத்தும்
பாவை யென தேயிலையாம்
இச்சை யுறும் துகிலுடுத்தும்
எழில் மிகுந்த குன்றுகளும்;
மிச்ச மில்லா வாழ்வினிலே
வேதனைகள் மிஞ்ச சதா
அச்ச முறும் மக்கள் நிலை
அழகென்று சிரிக்கு மிங்கே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓட்டைத் தகரம் அதில்
ஒழுகும் மழை நீரெல்லாம்
வீட்டைக் குள மாக்குமிவர்
விழிகளும் நீர்க் குளமாகும்
மூட்டிய அடுப்பில் தீ
மூளாது புகை மூளும் – மலை
நாட்டிலிக் காட்சியெலாம்
அழகென்று சிரிக்கு மிங்கே!

ஒட்டி யுலர்ந்த கன்னம் - அதன்
உள்ளே புதைந்த விழி
பட்டை யுரிந் தேவெயிலில்
பட்ட மரம் போல்கைகால் - தங்க
கட்டியெனும் பொன்னுடலும்
காய்ந்த சருகாகமலைத்
திட்டினில் வாழ் பெண்கள் நிலை
அழகென்று சிரிக்கு மிங்கே!

கம்பளியும் சாக்குந்தான்
கட்டையிலே போகும் வரை
வெண்பஞ்சு மெத்தை யிவர்
மேனியெலாம் கருகிடவே
நம்பிக்கை யோடு ஒரு
நாள்முழுதும் பாடுபாட்டு,
கும்பிநிறை யார் வாழ்வில்
அழகென்று சிரிக்கு மிங்கே?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்று கவிதைகள்....!

## பாசம்

நேற்று வரை
என்னைத்
திரும்பித் பாராதவர்
இன்று
மாய்ந்து மாய்ந்து
அழுகின்றார்கள்.
நான் பிணமான பின்னே
என்னில் இவ்வளவு
பாசமா?
எனது
பிராவிடண்ட்
நிதியிலா?

## தேயிலை

கிள்ளி எடுத்து
கூடையில் சேர்த்து
வாட்டி வதக்கி
அரைத்துத் தீய்த்து
நீரில் கரைத்தால்
செந்நீர்......
எங்கள் குருதி
உழைப்பின் சின்னம்

## மாறுதல்

மதுவும், மாதும்
இளமையில்
எனது
சொர்க்கம்....
வறுமையும்
நோயும்
வாங்கி ....
முடங்கிய கால்களை
நீட்ட
முடியாது
இன்று...
மூலையில் கிடக்கின்றேன்
பிணமாய்......!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுமைப் பெண் !

காலையி லேபனி காயுமுன் னேகுளிர்
காற்றைக் கிழித்திவள் ஓடுகிறாள்!—தொழிற்
சாலையி லேசங்கு ஊதுமுன் னேபசுந்
தங்கத் தளிரினைக் கிள்ளிடுவாள்!

வெண்டை விரல்கள் விறைத்திடினும்—தன்
மேனி குளிரில் நடுங்கிடினும், இரு
கெண்டை விழிகள் பளபளக்கும் தளிர்
கிள்ளவோ கைகள் பரபரக்கும்!

தூரத் தெரியும் மலைமுகட்டில் எழும்
சூரியன் தன்பொற் கதிர்களினால், இவள்
தேகந் தழுவியே சுகித்திடுதிவான் வண்ணச்
செம்பொற் துகள்தனை தூவிடுவான்!

முத்துக்கள் நூறுமு கத்தில் மின்னும்—தங்க
மூக்குத்தி மின்னியே கண்சிமிட்டும், பிறை
நெற்றியில் குங்குமப் பொட்டு மின்னும். இவள்
நெஞ்சத்தில் கற்புக் கனல் பிறக்கும்!

கூடை அசைத்திரு பக்கத்திலும் வந்து
கூட்டும் 'கிறிக் கிறுக்' கோசையிலே—நெஞ்ச
மேடையி லேசதி ராடுமெண்ணங்களின்
வேதனை துன்ப ஒலி கேட்கும்!

பக்க நிறைச்செடி சிக்கிடும் போதிலும்
பக்குவ மாகவி லக்கிச் செல்வாள்,—தன்னைச்
சிக்கவைத் திருக்கும் அடிமைத் தளையினை
தூக்கி யெறியத் துணிவு கொள்வாள்;

வெட்டிய செடியில் புடைத்தெழும் அரும்பென
மேலூறும் எண்ணம் இவள் மனதில், இனி
முட்டித் ததும்பி முளைத்து விடும்—தன்னை
மூடிய பேரிருள் ஓட்டிடுவாள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றும் அடிமைச் சிறையினிலே, வைத்த
எத்தர்கள் கொட்ட மடக்கிடவே, பெருங்
குன்று நிகர்த்த மனவுறுதி கொண்டு
கோதையர் போரிடமுன் வருவார்!

பெண்ணுக்கு கல்வி பெருந்தீது, உரிமைப்
பேசிடிலோ அது பெருந்தவறு,—என்ற
எண்ணம் படைத்தவர் மண்ணிற் புதைந்திட
எண்ணற் கரிய கலை படைப்பார்!

ஆக்கிப் படைப்பதும் ஆண்களுக் கேசுகம்
அளிப்பதும் பெண்கள் கடமையெனும்—பழம்
போக்கையே தள்ளி மிதித்து நவயுகப்
புதுமைப் பெண்ணுகவே மாறிடுவார்!

சாதிக் சமய சழக்கறுத்து, பெண்கள்
தாழ்வு எனும்தீய போக்கெழித்து—இம்
மேதினி யில்புநி மாற்றம் படைத்து பெண்
விடுதலைக் கீதம் இசைத்திடுவார்!

பெண்ணுக்கு இங்கோர் தனிநீதி—என
பேசிடும், நூல்கள் எவையெனினும்,—அதை
மண்ணில் புதைத்து மகிழ்ந்திடுவோம்! நவ
மாதர் அறங்கள் படைத்திடுவார்!

பாரதி கண்ட புதுமைப் பெண்ணுய்: இந்த
பாரில் புரட்சி பலபுரிந்தே—தன்முன்
நேரிடும் துன்பங்கள் யாவையும் வென்றிடும்
நெஞ்சுர மிக்கவ ராய் வருவார்!

போலித் தலைமை பொசுக்கிடுவார்] இவர்,
பொய்மைத் திரையை கிழித் தெறிவார்
பாலித்திடுவார் புதுயுகத்தை, மலைப்
பாவையவர், வாழ்வில் உயர்ந்திடுவார்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி!

ஏட்டினின் நான் எழுதும்
இனியசெந் தமிழ்சுவையார்
பாட்டுகளை இன்னிசையில்
பாடுகின்ற பூங்குயில்தான்
வீட்டை மறந்து
விரிந்த சுற்றம் புவி மறந்து
கூட்டை விட்டு எங்கோடி
கூவ நினைத்தது வோ?

தாமரைப்பூங் குளத்தினிலே
தண் கழுநீர்ப் பூக்களையே
காட்டெருமை தின்றதுபோல்
காலன்மணி மேகலையை
போட்டு மிதித்தானோ?
புகழ்வதற்கோ யாருமில்லை
வார்த்தை ஒன்றும் கூறாது
வானுலகைத் தான்விரும்பி
காற்றோடு போய்விட்ட
காரணந்தான் தெரியவில்லை
மங்காப் புகழ்க் கவிதை
வரையும் கவிஞர்களே!
உங்களுக்குத் தெரிந்திருந்தால்
ஒரு வார்த்தை சொல்லிடுங்கள்!
புண்ணான நெஞ்சுக்கு
புனுகாகும் அவ்வார்த்தை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணை இழந்தாலும் கருத்தை இழக்காத
பொன்னே! புதுமலரே! பொங்கிவரும் முழுநிலவே!
என்னைப் பைத்தியமாய் இங்கிருக்க வைத்துட்டு
விண்ணை விரும்பிவிட்ட என்மகளே உன்னை எண்ணி
கண்ணீரில் கவியெழுதி காணிக்கை வைக்கின்றேன்!

மண்ணுலக மக்கள் வாழ்வுக்கு கவிபாடும்
தென்னவனும் என்னை தேனூர் பசுங்கிளியே!
மண்ணுக்குள் உன்னைவைத்து மகளே, அஞ்சலிக்கவிதை
பண்ணும் நிலைவரவோ பாவிநெஞ்சம் தாங்கவில்லை
எண்ணி...எண்ணி நெஞ்சம், எரிநெருப்பாய் கொதிக்கிறதே!

என்னைப்போல் வானொலியில் இனியதமிழ் ஏடுகளில்
உன்குரலும் உன்னுருவும் உலவிவர நினைத்தாயே!
ஆசைக் கனவெல்லாம் அடிமரளச் செய்துவிட்டு
பேசா மடந்தையென போய்விட்ட மாயமென்ன?
பேசிக் களித்ததெல்லாம் பொய்யாக்கி பொய்யாத
ஈசன் திருவடியில் இணைந்திருக்கச் சென்றாயோ?

வானில் மழைநீரும் மனம் அழுத கண்ணீரும்
வீணென்று இறைகருணை வெள்ளத்துள் ஆழ்ந்தாயோ?
பொன்னகையும் புன்னகையும் போலியென்று தேவனுடைச்
சன்னிதியின் மெய்யழகில் தான் கலந்து விட்டாயோ?
மல்லிகையின் மலர்தூவி வாழ்த்த நினைத்திருந்தேன்!
எள்ளுப் பொறிதூவி இறைக்கும்நாள் வந்ததையோ!
முல்லைப்பூச் சூடி முகமலர நாள் பார்த்தேன்
அல்லி விழிமூடி அமுத இதழ் மூடி
வெள்ளைத் துகில்மூடி மேனியிலே மலர்மூடி
சொல்லாது நீ போகும் துயரநாள் வந்ததையோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவோலை நீயென்று படித்து இரசித்திருந்தேன்
சாவோலை நீ கையில் தாங்கிநின்ற தறியேனே!
மாவிலையும் தோரணமும் வாழ்த் தும் நாள் பார்த்திருந்தேன்!
பாவிநான் இரங்கற்பா பாடும்நிலை வந்ததையோ!

நாதசுர மேள இசை நடுவினிலே ஊர்வலத்தில்
பாதசரம் குலுங்கநடை பயிலும்நாள் பார்த்திருந்தேன்!
பூத உடலாய்நீ பொன்மகளே நான்குபேர்
தோள்களிலே ஊர்வலமாய் செல்லும்நிலை வந்ததையோ?

வானில் உயிர்கலக்க மண்ணில் உடல் கலக்க
தேனூர் மொழிகாற்றில் சென்று கலந்துவிட
பொய்யாய் பழங்கதையாய் போய்விட்டதுன்வாழ்வு
மெய்யாய் என் உணர்வெல்லாம் மேவிகணங்கணமும்
பொய்யாத வள்ளுவனின் புத்தமுதாம் முப்பால்போல்
வையத்தில் நான்வாழும் வரையில் தமிழினிலே
செய்ய கவிதைகளாய் சீர்பெறுவாய் தேன்மொழியே!

19-7-86ல் காலமான எனது மகள் மணிமேகலைக்காக எழுதிய ''கண்ணீர் அஞ்சலிக்கவிதை'' 17-8-86ல் சிந்தாமணியில் வெளியாகியது.

89660



PUBLIC LIBRARY,
JAFFNA.
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருதிப் பூக்கள்

வீணே, மலர்ந்து
உதிர்ந்து, கருகும்
தேயிலைப் பூக்களா
நாங்கள் ?
எங்கள்
குருதியை
உறிஞ்சிக் குடித்து
ஊதிப் பெருத்த
முதலாளித்துவத்தின்
தொந்தியை
கிழித்து,
அதில்
தோய்த்து எடுத்த
குருதிப் பூக்கள்
நாம் !

# உழைப்பின் சின்னம்

கிள்ளி எடுத்து
கூடையில்,
சேர்த்து
வாட்டி வதக்கி
அரைத்துத் தீய்த்து
நீரில் கரைத்தால்
செந்நீர !
எங்கள் குருதி
உழைப்பின் சின்னம்

## சிப்பிகள்

முத்தை
தாங்கும்
மோக மயக்கத்தில்
திருமண
மழைத்துளிகளுக்காக
வாழ்வெல்லாம்
ஏங்கித்
தவம் கிடக்கும்
கன்னி
பெண் சிப்பிகள் !

## நிலை

அன்று
தேயிலை
சிம்மாசனத்தின் மீது
நாங்கள்
வீற்றிருக்கும் போது
எத்தனை
பாசம் பரிவு !
ஊட்டத்திற்கு
உரம்
நோய் தடுக்க
மருந்து.........
இன்று
நிறுவைக்களத்தில்
சிதறி வீழ்ந்து
காய்ந்து கருகி.........
கால்களில்
மிதிபட்டு
ஒதுக்கப்பட்டு
ஓரமாய் கிடக்கிறோம் !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வக்கிர மனங்கள்

திருமணச் சந்தையில்
பெண்மை நலங்கள்
பொலிவுற்று,
இருந்தாலும்
வரதட்சிணை
தராசில்
நிறுத்துப் பார்க்கும்
வக்கிர மனங்கள் —
தெருநாயின் கழுத்தில்
டி வி, வீடியோ
கார், காணி
காசு, காணில்
'ஆஹா' என்று
அணைத்துக் கொள்ளும் !

குறும்பா

பாப்பாத்தி தூக்கி வந்தாள் கூடை!
பார்த்து நிறை சொல்பவனோ காடை!
தீப்பாயும் கண்களினால் —
மேய அவள் மேனிதனை —
நாப்பாடும் 20 திது சாடை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேநீர் க (வி) தை

உயர்ந்த மலைகளின்
சரிவுகளில்
ஓங்கிச்
செழித்திருக்கும்
தேயிலைச் செடிகளில்
பிறந்தோம் !
தென்றலில்
ஆடிக்களித்திருந்தோம்,
காலனின்
பாசக்கயிறும்
காரிகையின்
காந்தல் விரல்கள்
எமது
கழுத்தை முறித்து
கூடைக் குழியில்
எறிந்தன,
கொலைக்கூட
தொழித் சாலையாம்
பூசா முகாமின்
உப்பரிகையின்
படங்கு பஞ்சணைவிரிப்பில்
வெப்பக்காற்றின்
இளம் சூட்டின்
அரவணைப்பில்
கண்ணயர்ந்தோம்,
விடிந்தது பொழுது,
விழித்தோம்
இளமை மேனி
எங்கு போயின ?
துவண்ட உடலாய்
சோர்ந்து கிடந்தோம்,
வாடி சோர்ந்த
வயோதிகத்தன்மை
கால தூதராய்
கருத்த உருவங்கள்
வந்து எங்களை
வாரி எடுத்தன,
அன்பென நினைத்தோம்
அந்தோ !
இயந்திர ராட்சதன்
கோரபற்களில்
கொடூரமாய்
அரைபட்டோம்,
உதிரச்சாறும்
உடலின்
தசைத்துகள்களும்
வேறுக்கபட்டு
சூளை அடுப்பில்
தீய்ந்து கருகி
சாவின்கைகளில்
சங்கமமானோம்
அன்றே எங்கள்
ஆவிமுடிந்தது ;
ஆயினும் எங்கள்
ஆன்மா அழியவில்லை
அது
விழித்து கொண்டிருக்கிறது
இன்னும் சிறுசிறு
இயந்திர அரக்கர்கள்
மென்று கடித்து
வெளியே துப்பினர்
சவபெட்டிகளாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சதுரப் பெட்டிகளில்
அடக்கம் செய்து
மூடி போட்டு
முத்திரை குத்தினர்,
தரத்தால் பிரிந்து
பெட்டிச் சிறைகளில்
பேசாத மௌனிகளாய்
லொறிகளில்
புகைவண்டிகளில்
யாத்திரை செய்து
கடலின் மேனியில்
கப்பலில் ஊர்ந்து
உலக சந்தைக்கு
ஊர்வலம் சென்ருேம்
எங்கோ ஓர்
நாட்டின்
எழில்மிகு அரண்மனை,
சீமான் வீட்டு
தேனீர் கோப்பையில்
குருதி நீராய்
நிரம்பி வழிகிருேம்

சுவைத்த சீமான்
சொல்லும் வார்த்தை ;
"ஆஹா என்ன
அற்புத சுவை!"
தேனுய் இனிக்கும்
தீம் குர கேட்டு
எங்கள் ஆன்மாவின்
நெஞ்சம்
குளிர்கிறது, சொர்க்கத்தி்ே
வாயிலை
மிதித்த சுகம்,
நான்
பிறந்த மண்ணின்
மைந்தர்களின்
உயிர்களிக்கும்
உடல்களுக்கும்
இல்லாத
பெருமை, மதிப்பு, புகழ்
எனது உடலின்
துகள்களுக்கு!

குறும்பா

மலைகளிலே ஊற்றெடுக்கும் தண்ணீர்!
மக்கள் விழி ஊற்றெடுக்கும் கண்ணீர்!
வளமூட்டி ஒளிகொடுக்கும் —
மாவலியாய் பாயும் எனில் —
இலை, இவர்க்கு குடிப்பதற்கு தண்ணீர்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானி

காட்டில்
கண்ணை மூடி
கடும் தவமியற்றும்
யோகியைவிட
சமுதாய
சாக்கடைகளை
தூர்த்து
சமதர்ம பூங்கா
சமைக்க உழைப்பவனே
ஞானி

# வாழ்வு

கால தேவனின்
கணக்குப்புத்தகத்தில்
பற்று வைக்கப்பட்ட
தவணைக் கடன்கள்,
வாழ்ந்த நாட்கள்
வரவில் வைக்கப்பட்டவை,
மீதி நாட்களோ
செலுத்த பட வேண்டிய
கடன்கள்
கடன் முடிந்ததும்
கணக்கும் முடியும்

89660



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நண்பனுக்கு, ஒரு மடல்

ஓ .........
நண்பனே !
உனது சுயத்தை
தரிசிப்பதற்கும்
உன்னைப்
புரிந்து கொள்வதற்கும்
எனக்கு
நான்கு
தசாப்தங்களல்லவா
போய் விட்டன !
இதுவரை, உன்னை
புரிந்து கொள்ளாமல்
போனதற்கு
எனது அறிவீனமா ?
உனது வெளிவேடமா ?
காரணம்!

அந்தஸ்து
கௌரவத்தில்
அதிகாரப் போதையில்
தலைக்கனத்துக்கிடக்கும்
நீ............
நடந்து வந்த, பாதையை
சற்று
திரும்பிப் பார்ப்பாயா !
அதை உனக்கு
ஞாபகப்படுத்துவதற்கே
வருந்துகிறேன் !

உனது உயர்வுக்கு
நான்
ஏணியாகவல்லவா
பயன்பட்டேன்
ஏணியைத் திரும்பி
பாரா விட்டாலும்
உதைத்துத்
தள்ளாமலாவது
இருந்தாயா ?
உனது
வாழ்க்கைப் பயிர்
தழைத்துச் செழிப்பதற்கு
எனது
உழைப்பையும்
உதிரத்தையும்
உரமாகவல்லவா
கொட்டினேன்!
உனது, வாழ்க்கைத்
தீபம், சுடர் விட்டு
பிரகாசிக்க
நெய்யாகவல்லவா
பயன் பட்டேன்,
நீ............ஆபத்தில்
சிக்கியபோது............
எனது
தோள்களிலல்லவா
தாங்கினேன்,

25880



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழ்மையின்............
எல்லைக்கோட்டில்
நான் !
வளமையின்
வஸந்தத் தேரில்
பவனி வரும்
நீ.........   !
தன்னலக் கோட்டையில்
உன் — தர்பார்
பொது நல போர்க்களத்தில்
என் — போராட்டம்,
வஸந்த மலர்களின்
மணத்தில் திளைக்கும்
மமகாரப் போதையில்
நீ........... !
மலர்களை உதிர்த்து விட்டு
காய்ந்து நிற்கும்
செடி, நான்........... !
பிறரின்.........
உழைப்புத் தணலில்
குளிர் காய்ந்து
கொண்டிருக்கும், உனக்கு
எரிந்து தணிந்து
நீறு பூத்துக் கிடக்கும்
நெருப்பான, எனது
நெஞ்சத்தாகம்
தெரியாதுதான் !
பதவிச் செருக்கும்
அதிகார மிடுக்கும்.........
இன்று, உன்
கண்ணை மறைத்தாலும்
என்றுவது ஒரு நாள்
உண்மை.
உனது — இதயக்
கதவைத்
திறக்காமலா போய்விடும்
அன்று............
பாவமன்னிப்புக்காவது
உனது
வேடச் சுமைகளை
இறக்கிவைப்பாயா !

89660

அடுத்த வெளியீடு

சி. வி. வேலுப்பிள்ளையின்

## "நமது கதை"

மலையக மக்களின் கண்ணீர் காவியம்

PUBLIC LIBRARY,
JAFFNA.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org